**தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டிற்குரிய வருமானக் கணக்குகளும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 135 – பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில்

எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுகையில் நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள குறைபாடுகள் | 2.1.1 |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முகாமைத்துவ செயற்பாடுகள்<br>2. இணக்கமின்மைகள்<br>3. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.5<br>2.10<br>2.11 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான | 1. எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை.<br>2. நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் | 2.1.2(அ)<br>2.1.2(ஆ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 3. | நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாத செயற்திட்டங்கள் | 2.1.2(இ) |
| | | 4. | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல் | 2.2.1 |
| | | 5. | உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல் | 2.2.2 |
| | | 6. | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்தல் | 2.3.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவு செயற்திறனுடன் பயன்படுத்தாமை. | 2.4(அ) |
| | | 2. | வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.4(ஆ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதித்து சமர்ப்பித்தல் | 2.1.3 |
| | | 2. | பொது வைப்புக் கணக்குகள் | 2.9 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை | 2.6(அ) |
| | | 2. | மிகை நிதி ஏற்பாட்டை வழங்குதல் | 2.6(ஆ) |
| | | 3. | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டை வழங்குதல் | 2.6(இ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | 1. | வருமான கணக்குகளில் குறைபாடுகள் | 2.7 |
| | | 2. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.8 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் பிரதான 09 செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கால அட்டவணை (Time Schedule) மற்றும் அந்த நடவடிக்கைகளின் எதிர்பார்த்த வெளியீடு / விளைவு (Output / Outcome) மதிப்பீடு செய்யப்பட்டு நடவடிக்கைகளின் செயலாற்றல் குறிகாட்டி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு 32 நானாவித செயற்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2,852.8 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அச்செயலாற்றல்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 2.1.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

(i) மீளாய்வாண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 75 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு அவற்றில் ரூபா 48.9 மில்லியன் உயர் விளைச்சலுடனான தென்னங்கன்று உற்பத்தி செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உயர் தரத்திலான பயிர்களைத் தெரிவு செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட காணி உரிமையாளர்கள் அந்த தெரிவு செய்யப்பட்ட தென்னை மரங்களிலிருந்து விதைத் தேங்காய்களை வழங்குவதற்கு விருப்பமின்மையின் காரணமாக மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட தென்னங்கன்று உற்பத்தியை நிறைவேற்றியிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை புனரமைத்தல் செயற்திட்டத்தின் கீழ் தேயிலை மீள் பயிர்ச்செய்கைக்காக ஒரு ஹெக்டயருக்கு ரூபா 150,000 வீதம் முற்கொடுப்பனவு செய்யப்பட்ட 2,587 ஹெக்டயர் காணிகளிலிருந்து தேயிலை மீள் பயிர்ச் செய்கை சம்பந்தமாக 20.12 ஹெக்டயர் காணிகளில் மாத்திரம் தொடக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(iii) மலைநாட்டுப் பகுதியில் சிறிய தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த கிராமிய விவசாய நுழைவு வீதிகளைப் புனரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 140 நுழைவு வீதிகளைத் தயார்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும் 88 நுழைவு வீதிகள் மாத்திரம் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 259.2 மில்லியன் வழங்கப்பட்டு ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் 02 செயற்திட்டங்கள், பிராந்திய தோட்டக் கம்பனிகளின் ஊழியர்களுக்கு நிதி நிவாரணமளிக்கும் ஒரு செயற்திட்டம், சுயமாக வர்த்தகப் பொருட்களை பரிமாற்றம் செய்யும் நிலையத்தை நிர்மாணித்தல், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் கட்டிடங்களுடன் 02 தோட்டக் காணிகளின் உரிமையைத் தீர்த்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகள் ஆண்டின் போது இடம் பெற்றிருக்கவில்லை.

**(இ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் விளைதிறனை மேம்படுத்துவதற்காக சிறிய நீர்ச் செயற்திட்டங்களின் கீழ் 80 குழாய்க் கிணறுகளை மீளாய்வாண்டின் போது நிர்மாணித்து அந்த நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்குத் தேவையான ரூபா 59.03 மில்லியன் நிதி ஏற்பாடு 2017 திசெம்பர் 06 ஆந் திகதியே நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டு வரை செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) உத்தேசிக்கப்பட்ட இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவனத்தின் தேசிய முடிவுறா மூலாதார பகுப்பாய்வு சேவை செய்யும் நிலையத்தை தோற்றுவிக்கும் நடவடிக்கை திட்டமிடப்பட்டிருந்து அதற்காக மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் தேவையான மென்பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 49.7 மில்லியன் நிதி ஏற்பாடு இறப்பர் ஆராய்ச்சி சபைக்கு 2017 திசெம்பர் 14 ஆந் திகதியே விடுவிக்கப்பட்டிருந்தது.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2018 யூன் 29 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 2.2 அமுல்ப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதியை பயன்படுத்தி அமுல்ப்படுத்தப்படுகின்ற 30 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,954.65 மில்லியன் மொத்த நிதி

ஏற்பாடும் 02 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக ரூபா 450 மில்லியன் நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 2,526.65 மில்லியன் மற்றும் ரூபா 326.14 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 2,852.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,551.85 மில்லியன் அல்லது 35.23 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை சிறிய தேயிலைத் தோட்ட மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களை மேம்படுத்துவதற்காக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 06 மாவட்டங்களில் தேயிலை மீள் பயிர்ச்செய்கையை 02 மாவட்டங்களில் இறப்பர் மீள் பயிர்ச்செய்கையையும் மேம்படுத்துவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களை புனர்வாழ்வளித்தல் செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்காக சந்தைகளை பல்வகைப்படுத்தல் மற்றும் சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்தி உதவி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 671 மில்லியன் நிதி ஏற்பாடு மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் அந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறிய தேயிலைத் தோட்ட மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 139.89 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உரிய கூறின் கீழ் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 உள்நாட்டு நிதிகள் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

உள்நாட்டு நிதிகள் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் துறையின் அபிவிருத்திக்காகத் தயாரிக்கப்பட்ட இறப்பர் பிரதான திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு 2016 யூலை 26 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தும் மீளாய்வாண்டின் போது அத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அத்திட்டத்தை அமுல்ப்படுத்தல் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை வெலிகம தென்னை இலைகள் வெளுருதல் மற்றும் கருகுதல் நோயைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களுக்காக ரூபா 475.36 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, நோயைத் தடுக்கும் காரணத்திற்காக 293,306 மரங்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் இழப்பீடாக ரூபா 327.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இன்னும் சில ஆண்டுகள் எடுக்குமெனவும் இந்த நோய்க்கு தாக்குப் பிடிக்கும் தென்னை இனம் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு செயலாளரால் கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.**

**2.3.1 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்தல்**

2017 ஆகஸ்ட் மாதத்தின் போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தென்னை, இறப்பர், தேயிலை, கண்காட்சியை (CRT Trade Fair) ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைக்காக ரூபா 14,942,000 செலவு செய்யப்பட்டிருந்தும் அதற்கான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கண்காட்சியின் வைபவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஒழுங்குபடுத்துனரைத் தெரிவு செய்வதற்கு கேள்விகள் கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விகளில் ஆகக் குறைந்த கேள்வியானது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களைத் தெரிவிக்காது நிராகரிக்கப்பட்டு ஆகக் குறைந்த கேள்வியை விட உயர்ந்த கேள்விக்கு ஒப்பந்தம் வழங்கியதன் காரணமாக ரூபா 9,839,300 மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது.

**2.4 சொத்துகள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவு செயலாற்றலுடன் பயன்படுத்தப்படாமை**

வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் 2015 ஆம் ஆண்டிலிருந்து இந்த அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து அக் கூட்டுத்தாபனத்தை மீளமைப்புச் செய்தலின் மூலம் மிகவும் சிறந்த சேவையை சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கும் குறிக்கோளுடன் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் தனியார் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலை, மூன்று உத்தியோகபூர்வ இல்லங்கள், தொழிற்சாலை அமைந்துள்ள 24.3 ஏக்கர் காணி என்பவற்றை பொருத்தமான முதலீட்டாளருக்கு வழங்காததன் காரணமாக 2010 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் துருசவிய நிதியத்திற்கு 02 மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது காப்புறுதி, மேற்பார்வை மற்றும் புத்துருவாக்கல் செலவுகளாக ரூபா 695,133 செலவு செய்யப்பட்டிருந்தது.

**2.5 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 31 ஆம் இலக்க ‘‘கப்ருக நிதிய அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பந்திக்கு இணங்க அமைச்சின் கீழுள்ள கப்ருக நிதியத்திற்காக அந் நிதியம் தோற்றுவிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் 02 நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான பதவியணியினர்களைச் சேர்த்துக் கொள்ளாது கட்டிடங்கள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. 2016 ஆகஸ்ட்

மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலத்திற்காக பயன்படுத்தப்படாத கட்டிடத்திற்காக ரூபா 2,490,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் ரூபா 59.3 மில்லியன் செலவு செய்து பத்தரமுல்லை பிரதேசத்தில் 75 பேர்ச்சஸ் காணி கொள்வனவு செய்து ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்கும் தேவையைக் கருத்தில் கொள்ளாது அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக வாடகையாக ரூபா 119 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) காணிகளைத் துண்டு போடுதலை கட்டுப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 12(8) மற்றும் 24 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தேயிலை, இறப்பர், தென்னை தோட்டங்களை துண்டு போடுதலை கட்டுப்படுத்தும் சபை உரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் பிரமாணங்கள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) உள்ளூராட்சி நிறுவனங்கள் காணிகளைத் துண்டு போடுவதற்காக அனுமதிகளை வழங்கும் போது தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை துண்டு போடுதலை கட்டுப்படுத்தும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**2.6 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலத்துள் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாகப் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 1,005.90 | 954.22 | 51.68 | 5.14 |
| | மூலதனம் | 998.40 | 968.69 | 29.71 | 2.98 |
| | **மொத்தம்** | **2,004.30** | **1,922.91** | **81.39** | **4.06** |
| 2014 | மீண்டுவருபவை | 1,176.06 | 1,132.19 | 43.87 | 3.73 |
| | மூலதனம் | 2,001.95 | 1,710.82 | 291.13 | 14.54 |
| | **மொத்தம்** | **3,178.01** | **2,843.01** | **335.00** | **10.54** |
| 2015 | மீண்டுவருபவை | 9,465.49 | 9,403.84 | 61.66 | 0.65 |
| | மூலதனம் | 3,123.35 | 2,417.33 | 706.02 | 22.60 |
| | **மொத்தம்** | **12,588.84** | **11,821.17** | **767.68** | **6.10** |
| 2016 | மீண்டுவருபவை | 2,949.85 | 2,704.62 | 245.23 | 8.31 |
| | மூலதனம் | 6,606.85 | 4,761.05 | 1,845.80 | 27.94 |
| | **மொத்தம்** | **9,556.70** | **7,465.67** | **2,091.03** | **21.88** |
| 2017 | மீண்டுவருபவை | 4,538.57 | 4,249.42 | 289.14 | 6.37 |
| | மூலதனம் | 5,077.04 | 2,856.23 | 2,220.8 | 43.74 |
| | **மொத்தம்** | **9,615.61** | **7,105.65** | **2,509.94** | **26.10** |

மீளாய்வாண்டு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

மீளாய்வாண்டில் 08 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 260.33 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடுகள் எதுவித பயன்பாடுமின்றி நூற்றுக்கு நூறு வீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

21 செலவு விடயங்களுக்கான ரூபா 5,358.58 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 3,219 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**(இ) குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டை வழங்குதல்**

06 அபிவிருத்தி உப செயற்திட்டங்களுக்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 262,618,700 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு முழுமையாகக் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.7 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 20.02.01.04 இன் கீழ் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற குத்தகைகளுக்காக ரூபா 1,200 மில்லியன் கூட்டு மொத்தமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,257.69 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 105 சதவீதமாக இருந்தது.

மேற்கூறிய வருமானக் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனததிற்கும் சொந்தமான 571 தோட்டங்கள் 1995 ஆம் ஆண்டின் போது 23 பெருந்தோட்ட பிராந்திய கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் மூன்று பெருந்தோட்டக் கம்பனிகளின் 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை மிகைத்திருக்காததனால் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அக்கம்பனிகளிடமிருந்து 1995 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைகள் அறவிடமுடியாதிருந்தது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டளவில் கம்பனிகளின் தேறிய சொத்துக்கள் ரூபா 200 மில்லியனை விட மிகைத்துள்ளது. என்பது இனங்காணப்பட்டிருந்தும் உடன்படிக்கைகளில் குத்தகை தொடர்பாக தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அந்த 3 கம்பனிகளின் கீழ் காணப்பட்ட 45 தோட்டங்களிலிருந்து அரசாங்கத்தினால் எதுவித குத்தகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருனாகல் பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 175.48 மில்லியன் குத்தகைப் பணத்தில் ரூபா 129.76 மில்லியன் 2009 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகக் காணப்பட்டதுடன் அக்குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 13501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 23.00 | 14.42 | 12.00 | 9.32 | 52.00 | 31.73 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 496,711 நிலுவை மீதிகள் 05 ஆண்டுகள் காலமாகக் காணப்பட்டு வந்ததுடன் கடன் மீதியை அறவீடு செய்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

## 2.9 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 47.02 கூட்டு மொத்தமாகும் அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 200,000 கூட்டு மொத்தமான 03 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென்னை, இறப்பர் மற்றும் தேயிலை வர்த்தகக் கண்காட்சிக்காக 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் எஞ்சியுள்ள ரூபா 36 மில்லியன் பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.10 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | - | நட்டங்கள் மற்றும் சேதங்களுக்குப் பொறுப்பானவர்களை நிர்ணயித்துக் கொள்வதற்காக நட்டங்கள் மற்றும் சேதங்கள் இடம் பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விசாரணைகள் நடாத்தி முழுமையான அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இடம் பெற்ற 05 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | 142,000 | உப கட்டு நிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் அக்கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 11 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு 01 மாதத்திலிருந்து 03 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. |
| (iii) | நிதிப்பரமாணம் 1646 | - | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.11.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுவதுடன் மீளாய்வாண்டிற்கான அமைச்சின் ஆளணி வேதனத் தொகுதிக்காக ரூபா 280.10 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 29 | 25 | 04 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 591 | 449 | 142 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 66 | 55 | 11 | - |
| (v) | ஏனையவை அமையம் /தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை | 26 | 53 | 14 | 41 |
| | **மொத்தம்** | **716** | **585** | **172** | **41** |